# ஜீவ ஒளி

"என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்."
(யோவான் 8:12)

2017 டிசெம்பர் ~ 2018 ஜனவரி ~ பெப்ரவரி வெளியீடு

## பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்.

1 தீமோத்தேயு 1:15

# ஜீவ ஒளி

தேவனுடைய வார்த்தைகள் அடங்கிய, ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சியை பெற்றுக்கொடுக்கக்கூடிய **ஜீவ ஒளி** சஞ்சிகையை வெளியிடுவதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம். இச்சஞ்சிகையின் மூலம் அநேக விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைவதும் இயேசு கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவர்கள் அவரை இரட்சகராக ஏற்றுக்கொள்வதுமே எங்களுடைய ஜெபமாயுள்ளது.

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம் வெளியிடும் இவ்விலவச சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் கடைசி பக்கத்தில் உள்ள கூப்பனை பூர்த்தி செய்து கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

**ஜீவ ஒளி**
**கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனம்**
**07, விவேகானந்த வீதி, கொழும்பு 06.**
**தொ. பே.: 011 2 581901**
www.christianfellowshipcentre.com

# வெட்டப்படாத கன்மலையாகிய கிறிஸ்து



நீர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கைகளால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து உருண்டு வந்தது அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது. சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியை எல்லாம் நிரப்பிற்று. ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

(தானியேல் 2: 34,35,44)

தம்முடைய முதல் வருகையிலே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு சிறிய கல்லைப்போலவே இவ்வுலகிற்கு வந்தார். இவ்வுலக அரசர்களில் ஒருவரைப்போல படாடோபத்துடன் அவர் வாழவில்லை. அவர் ஒரு சாதாரண மனிதராகவே வந்தார். எனினும் பாவமில்லாதவராகவே இருந்தார். அதனால் தான் அவர் சவாலாக “என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?” என்றார் (யோவான் 8:46). இன்றைக்கும் அவரது உண்மையான சீஷர்கள் எண்ணிக்கையில் வெகு சிலரே என்ற போதிலும் அவர்களாலே அவர் தம்முடைய இராஜ்யத்தை நிலைநாட்டிக்கொண்டிருக்கிறார். தேவனுடைய வசனத்தை ஏற்றுக்கொண்டவர்கள் மிகவும் சாதாரணமான மக்களாகவே இருந்த போதிலும், அவர்கள் பயம் எதுவும் இல்லாமல் பூரண சந்தோஷமும், சமாதானமும் நிறைந்தவர்களாய் இருப்பார்கள். தேவனின் இராஜ்ஜியம் நிறுவப்பட்டு வருவதை அவர்கள் விசுவாசக் கண்களால் பார்க்கின்றனர். அவர்களது சந்தோஷம், சமாதானத்தின் இரகசியம், அவர்களுடைய கண்கள் எப்பொழுதும் அந்த இராஜ்ஜியத்தையே நோக்கிக் கொண்டிருக்கிறது.

பொன் இவ்வுலக மகிமையையும், வெள்ளி இவ்வுலக ஐசுவரியத்தையும், வெண்கலம் உலக ஞானத்தையும், இரும்பு மனுஷீக வல்லமையையும், எடுத்துக் காண்பிக்கிறது. இந்நான்கு காரியங்களும் ஒவ்வொரு மனிதனின் இருதயத்திலும் குடிகொண்டிருக்கிறது. பூலோக மகிமை, செல்வம், ஞானம், சுய பெலம் ஆகியவற்றின் மீது மோகம் கொள்ளாதவர் யார்? ஆனால், இவற்றில் ஒன்றும் நிலைத்திருக்கப்போவதில்லை. ஒரு நாளில் இவை எல்லாமே முற்றிலுமாக நிர்மூலமாக்கப்படும்.

உன் வாழ்க்கையிலிருந்தும் இந்த நான்கும் முற்றிலுமாக நீக்கப்பட்டால் தான் நீ ஜெய ஜீவியம் செய்கிறவனாய் காணப்படுவாய். அப்பொழுது வெட்டப்படாத கன்மலையாகிய கிறிஸ்து உன்னில் வளர்ந்து பெருகுவதை எல்லோரும் கண்டு கொள்வார்கள். கிறிஸ்துவின் ஜீவன் உன்னை நிரப்புவதற்கு ஆவலுள்ளவனாக இருப்பாய். உன்னுடைய கண்கள் இடைவிடாமல் நித்தியமானவைகளையே நோக்கிக்கொண்டிருக்கும். உன் பிரயாசங்களின் நித்தியமான பலனைப் பெறுவாய்.

-சகோ. பக்த் சிங்-



# வீலை மதிப்பீட முடியாத முத்து

இந்தியாவின் மேற்குக் கடலோரப் பகுதியை ஒட்டியுள்ள ஒரு குக்கிராமத்தில் சாபு என்கிற முத்துக்குளிக்கும் ஒருவன் தனியே வசித்து வந்தான். ஒரு நாள் முத்துக்குளியலை முடித்துக்கொண்டு, கரையை அடையும்போது தன் நெருங்கிய நண்பர் நிற்பதைக் கண்டு பெரும் மகிழ்ச்சியடைந்தான். ஏனெனில், இருவரும் அடிக்கடி சந்தித்து ஆன்மீக சம்பந்தமான விடயங்களை பேசுவர். சாபு இந்து மதப் பற்றுடையவனாக இருந்தபோதிலும் தன் கிறிஸ்தவ நண்பரிடம் மிக அன்புடனும், பண்புடனும் பழகுவான்.

இப்போது படகு தன் துறையை அடைந்துவிட்டது. நண்பர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நலம் விசாரித்த பின், சாபுவின் குடிசையை நோக்கி பேசிக்கொண்டே நடந்தனர். நண்பன் சாபுவைப் பார்த்து "சாபு உன்னைப் பார்க்கும் போது நீ மிகவும் சோர்ந்திருப்பதுடன் வயதாகிவிட்டபடியால் உன் நடையும் தள்ளாடுகிறது. இதுவே நீ கடைசி முறையாக முத்துக்குளிக்க சென்றதோ? என்று என்னை சிந்திக்க வைக்கிறது, என்றதும் "ஆம்! இனி நான் கடலோரப் பகுதியில் நான் நடமாடப்போவதில்லை. அத்தோடு எனக்கு வயதாகிவிட்டதால், முத்துக்குளிப்பதிலும் சிரமமாக இருக்கிறது. ஆனாலும், என் வாழ்க்கையில் ஒரேயொரு இலட்சியம் நிறைவேறப்போகும் நாள் மிக அருகாமையில் இருக்கிறது. பல நூறு மைல்களுக்கு அப்பாலுள்ள கங்கை நதியில் மூழ்கி நீராடி நான் மன நிம்மதியடையப் போகிறேன். ஏனெனில் என் வாழ்நாளெல்லாம் எதற்காக ஏங்கினேனோ அது விரைவில் நிறைவேறப் போகிறது" எனச் சொல்லி அளவில்லா மகிழ்ச்சியடைந்தான்.

சாபுவின் கிறிஸ்தவ நண்பர் பலமுறை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அவனுக்கு தெளிவுபடுத்தியிருந்தார். இப்போது மீண்டும் அதை அன்போடு விபரிக்க ஆரம்பித்தவர் பாவ மன்னிப்பானது எந்த புண்ணிய நதியில் நீராடுவதாலும் கிடைப்பதல்ல. ஆனால், பாவங்கள் மன்னிக்கப்பட ஒரேயொரு வழி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்திய இரத்தத்தின் மூலமாக மட்டும் தான் கிடைக்கக்கூடியது. மேலும் இயேசுவானவர் நமக்கு இந்த மாபெரும் மீட்பையும், பரிசுத்த ஆவியானவரினாலுண்டாகும் சந்தோஷத்தையும் இலவசமாய் வழங்குவதற்காக அவர் சிலுவையில் தன்னுடைய ஜீவனைக் கொடுத்தார் என்பதை வேதத்திலிருந்து திரும்பவும் தெளிவாக எடுத்துரைத்தார்.

இதையே அடிக்கடி கேட்ட சாபு, நகைப்புடன் "நீர் சொல்லும் கிறிஸ்தவ வழி இலகுவானது. ஏனெனில், விசுவாசிப்பனுக்கு இலவசமாக கிடைக்கிறதே! நான் அடையப்போகும் முக்தி நிலையை அதாவது இரட்சிப்பை பிரயாசப்பட்டு சம்பாதிக்க விரும்புகிறேன்" என்றான். இந்நேரத்தில் சாபுவின் சிறிய குடிசையை அடைந்து விட்டார்கள். சாபு தன் நண்பரை இல்லத்திற்குள் அன்போடு வரவேற்றான்.

"நான் புண்ணிய யாத்திரை புறப்படப்போவதால் நம் நட்பின் அடையாளமாக ஒரு பரிசுப்பொருளை உங்களுக்கு கொடுக்கப் போகிறேன்" என்றவன் குடிசையின் ஒரு மூலையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு சிறு துணி

உருண்டையை தேடிக் கொண்டு வந்து மெதுவாகப் பிரித்தான். எவ்வளவு ஆச்சரியம் பாருங்கள்! சாபுவின் கையில் நன்கு தூய்மையான பிரகாசமான முத்தொன்று ஜொலித்துக் கொண்டிருந்தது. அவனுடைய நண்பரின் மூச்சு ஒரு செக்கன் நின்றுவிட்டது. “எவ்வளவு அழகான ஒப்பற்ற முத்து! இது அரசரின் கிரீடத்தில் பதிக்கத் தகுதியானதே! என்று அவர் சொன்னதும், சாபு “ஆம் நான் என் ஆயுள் காலத்தில் பார்த்த முத்துக்களில் இதுவே பழுதற்றது. உங்களிடத்தில் சொல்லாததொன்றுள்ளது. இதை நான் ஒரு விஷேச காரணத்திற்காக வைத்திருந்தேன். எனக்கொரு மகன் இருந்தான். அவன் முத்து குளிப்பதில் மிகவும் கெட்டிக்காரன். பல மணி நேரம் மூச்சையடக்கும் சக்தியுடையவனான அவன் ஒருநாள் மிக ஆழமான இடத்திற்கு சென்று தேடிக் கொண்டு வந்தது தான் இந்த விலையேறப்பெற்ற முத்து” எனக் கூறிவிட்டு அழ ஆரம்பித்தான் சாபு. “நண்பரே! அவன் நீண்டநேரம் தண்ணீரில் இருந்ததால் அவனின் நுரையீரல் பாதிக்கப்பட்டு மரணமடைந்தான்” என்றவன் “நான் உமக்கு வெகுமதியாக கொடுக்கும் இம்முத்தின் விலைமதிப்பு என் அன்பு மகனின் உயிருக்கு சமானம்” என்று கூறி கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

“இதையா எனக்குக் கொடுக்கப் போகிறாய்? வேண்டாம்! விலை மதிக்க முடியாத ஒரு உயிருக்கு சமனாக கருதும் இம்முத்தை இலவசமாக பெற மாட்டேன். நான் எப்படியாவது பாடுபட்டு பணத்தை சேகரித்து வாங்கிக் கொள்கிறேன். ஆதலால், வெகுமதியாக இதை வாங்கமாட்டேன்” என்றார்.

அதற்க சாபு “நண்பரே! நீர் இதற்கு போதுமான தொகையை கொடுக்கவே முடியாது. ஏனெனில், இதின் விலை மதிப்பிட முடியாதது. அதைவிட எனது அன்பு மகன் தனது உயிரை கொடுத்து சம்பாதித்தது அல்லவா? இதனுடைய விலை எனது மகனின் உயிர்! என்றான்.

“சாபு நீர் சற்று முன் சொன்னது என்ன? கிறிஸ்தவம் மிக இலகுவானதும், இலவசமானதும் என்றல்லவா? எதையாவது கொடுத்து சம்பாதிப்பது தான் மதம்(ஆன்மீகம்) என்பது உன்னுடைய தவறான கருத்து. அருமையான நண்பா! உன்னுடைய இரட்சிப்பிற்காக (பாவத்திலிருந்து, நரகத்திலிருந்து காப்பாற்றுவதற்காக) தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு மரித்து பின் மூன்றாம் நாளில் உயிருடன் எழுந்தார். விசுவாசிக்கிற எவனும் எந்தக் கிரயமுமின்றி இலவசமாக இரட்சிக்கப்படலாம்” என்றவர் கிறிஸ்தவம் ஒரு மதம் அல்ல என்பதையும் விபரித்து, தேவன் தம்முடைய விலை மதிக்க முடியாத தமது குமாரனை, பாவி மனுஷருக்காய் பரலோகிலிருந்து இந்தப்பூமிக்கு அனுப்பினார். தேவ குமாரனாகிய இயேசு இரட்சகர் தன் உயிரையே கிரயமாக, பணயமாக வைத்து சம்பாதித்திருக்கும் இரட்சிப்புக்கு உன்னால் விலை கொடுக்க முடியுமா? இது முற்றிலும் இலவசமான கொடையாகும் என்றார் சாபுவின் நண்பர்.

**இதனுடைய விலை**
**எனது மகனின் உயிர்!**

வயதான சாபு கண்ணீரோடு தேவனின் அன்பை எண்ணி, நம் அன்புள்ள தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு தன்னை பரிபூரணமாக ஒப்புக்கொடுத்தான். அமைதியாக சிறிது நேரம் முழங்காலில் இருந்து எழுந்ததும், சாபுவின் நண்பர் கீழ்வரும் வேதபகுதிகளை சத்தமாக வாசித்தார்

“நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார்.” ரோமர் 5:6

"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல." எபேசியர் 2:8,9

குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. அவர் உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலமாய்த் தேவன் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்தக்கடைசிக்காலங்களில் வெளிப்பட்டார். 1 பேதுரு 1:19.20

தேவன் நமக்கு நித்தியஜீவனைத் தந்திருக்கிறார், அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே அந்தச் சாட்சியாம். குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன். 1 யோவான் 5:11,12

**நமக்கு**
**ஒரு பாலகன் பிறந்தார்**
**நமக்கு ஒரு குமாரன்**
**கொடுக்கப்பட்டார்.**
**கர்த்தத்துவம்**
**அவர் தோளின்மேலிருக்கும்**
**அவர் நாமம்**
**அதிசயமானவர்,**
**ஆலோசனைக்கர்த்தா,**
**வல்லமையுள்ள தேவன்,**
**நித்திய பிதா,**
**சமாதானப்பிரபு என்னப்படும்.**
**ஏசாயா 9:6**

## வேதாகம புத்தகங்கள் பற்றிய புதுமையான புள்ளிவிபரங்கள்

## நியாயாதிபதிகளின் புத்தகம்

| | |
|---|---|
| அதிகாரங்கள் | : 21 |
| வசனங்கள் | : 618 |
| காலம் | : கி.மு 1043 - 1004 |

இஸ்ரவேலரை ஒடுக்கியவர்கள்

- மெசொப்பொத்தாமியர் (3:8)
- மோவாபியர் (3:12)
- பெலிஸ்தர் (3:6)
- அம்மோனியர் (3:6)
- கானானியர் (3:12)
- மீதியானியர் (6:2)
- சீதோனியர் (3:3)

இப்புத்தகத்திலுள்ள நியாயாதிபதிகள்

- ஒத்னியேல் (3:9-11)
- ஏகூத் (3:11-29)
- தெபொராள், பாராக் (4-5)
- கிதியோன் (6-8)
- அபிமெலேக்கு (9)
- யெப்தா (11-12:7)
- சிம்சோன் (13-16)
- சம்கார் (3:31)
- தோலா (10:1)
- யாவீர் (10:3)
- இப்சான் (12:8)
- ஏலோன் (12:11)
- அப்தோன் (12:13)

# ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பெயரில் நிறைவான ஆசீர்வாதங்கள்

**1. தேவனுடைய பிள்ளைகளாகிறோம்**

அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்-கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். (யோவான் 1:12)

**2. விசுவாசித்தால் ஆக்கினைத்தீர்ப்பில்லை.(தண்டனை தீர்ப்பு இல்லை)**

அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான் விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று (யோவான் 3:18)

**3. ஆண்டவரின் பிரசன்னம் (சமுகம்)**

இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்-களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார். (மத்தேயு 18:20)

**4. ஜெபத்திற்கு பதில்**

நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்-படும்படியாக, அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக்-கேட்டாலும் அதை நான் செய்வேன். (யோவான் 14:13,14)

**5. பரிசுத்த ஆவியானவர்**

என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)

**6. இரட்சிப்பு**

அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படி-க்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லா-மல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை. (அப்போஸ்தலர் 4:12)

**7. நித்திய ஜீவன்**

இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும் படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது (யோவான் 20:31)

**“தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.”**
**பிலிப்பியர் 2:9,10,11**

- Sis. Tilaka -

# நீ முன் மாதிரியா?

- Sis. Viji Benaventhoor -

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே! கிறிஸ்தவர்களாகிய நாம் இக்காலத்தில் எந்த மாதிரியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். என்று சற்று ஆராய்வோம். 1 பேதுரு 2:21 ல் இயேசு தம்முடைய அடிச்சுவடுகளை தொடரும்படி நமக்கு மாதிரியை வைத்துப் போயிருக்கிறார். ஆனால், எம்முடைய மாதிரி எப்படி?

முன்பு இரட்சிக்கப்படாத காலத்தில் நீ யாரையும் அன்பு செய்ததில்லை என்னை நான் அன்பு செய்தால் போதும் என்று வாழ்ந்தது போலவே இப்போதும் வாழ்ந்தால் இது முன் மாதிரியல்ல. 1 யோவான் 4:10 ல் நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது. அவர் முந்தி நம்மில் அன்பு கூர்ந்ததால் அம்மாதிரியைப்பின்பற்றி நாம் ஒவ்வொருவரையும் அன்பு கூர கடமைப் பட்டிருக்கிறோம்.

எபிரெயர் 10:25 சபை கூடி வருதலை சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்தி சொல்ல வேண்டும் என்கிறது. ஆகவே, நீ முன்மாதிரி வாழ்க்கைக்கு வா!

முன்பு நீ ஏழைகளுக்கு இரங்குவதில்லை. ஆனால், இரட்சிக்கப்பட்ட பிறகும் உன் திருச்சபையில் இருக்கும் ஏழைகளுக்கு நீ இரங்குவதில்லை. உன் மாதிரி இது தானா? நீதி 19:17, ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான். அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார் என்கிறது. ஆகவே நீ இரக்கம் காட்ட தயங்கத்- தேவையில்லை. முன்பு இந்த உலகம் தான் எல்லாம் என வாழ்ந்தாய். நித்திய வாழ்வின் நம்பிக்கையற்றவனாய் இருந்தாய். ஆனால் அவர் நித்திய ஜீவனையே தந்திருக்கிறார். நித்திய ஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம் என 1 யோவான் 2:25 கூறியிருந்தும் அதை குறித்த சந்தோஷம் அற்றவனாக உலகத்தை பிரியப்படுத்தி அதின் இச்சைகளிலே மயங்கித்திரிகிறாய். மனந்திரும்பி இயேசு வைத்திருக்கும் முன் மாதிரியான வாழ்வுக்குள் வா!

லூக்கா 6:38ல் ஆண்டவர் இயேசு, கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள் நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். 1 நாளா 29:14ல் எல்லாம் உம்மால் உண்டானது உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுத்தோம் என அரசன் சாலோமோன் கூறுகிறார். கர்த்தர் கொடுப்பதில் அவருக்கு உண்மையாய் கொடுக்க உன்னால் முடியுமா? மனந்திரும்பி தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்து முன் மாதிரியைக் காண்பி.

முன்பு உன்னிடம் மூர்க்கமும் கோபமும், கூக்குரலிடுகிறதும் பொய்யும் தவறுகளும் காணப்பட்டன. இப்போதும் சிறிதளவும் மாற்றமில்லை. குடும்பத்திலும், வெளியிலும் இச்சுபாவங்களை காண்பிக்கிறாய். எபேசியர் 4: 25,26,31 பொய் சொல்லாதிருக்கவும், பொய்யைக்களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. சகலவிதமான கசப்பும்,

கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், துஷணமும், மற்ற எந்தத்துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. சண்டைக்காரராயிருந்து, சத்தியத்திற்குக்-கீழ்ப்படியாமல், அநியாயத்திற்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்களுக்கோ உக்கிரகோபாக்கினை வரும் என்கிறது ரோமர் 2:8 மனந்திரும்பி சமாதானத்தை முன்மாதிரியாக வெளிப்படுத்து.

முன்பு உன் வாழ்க்கை உலக ஆடம்பரத்திலும் அதன் கவர்ச்சியிலும் பெருமையிலும் மூழ்கி இருந்தது. இப்போதும் அதையே நீ நாடுகிறாய் அல்லவா? இன்னும் தேவ ஜனங்களின் ஆடைகள் அவிசுவாசிகள் போலவே அவலடசணமாக அரை குறையாக, ஆடம்பரமாக இருக்கிறது. உலகத்-தாரைப் போலவே அலங்காரங்களும், இருக்கிறது. இதுவா உன் மாதிரி? இதற்கா தேவன் உன்னை அழைத்தார்? தேவ சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்குப் பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்-தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 1 கொரி 4:4 உன் கண் முன்னே குருடா? இன்னும் திறக்கவில்லையா?

சிந்தியுங்கள் பிரிமானவர்களே! நாம் ஆராய்வோம். இன்னும் அநேக காரியங்கள் இருக்கின்றன. நாம் யாருக்கும் இடறலற்றவர்களாயிருக்கவே தேவன் விரும்புகிறார்.

**நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள். 1 கொரிந்தியர் 10:33**

**கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்~பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். பிலிப்பியர் 3:13**

தேவன் தாமே திருச்சபையார் யாவருக்கும் உதவி செய்வாராக!

## எங்கள் ஐக்கியத்தில் இடம்பெறும் கூட்டங்கள்

### ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| மு.ப. 8.15 | - | ஞாயிறு பாடசாலை |
| மு.ப. 9.30 | - | ஆராதனை வேளை |
| பி.ப 1.30 | - | வாலிபர் கூட்டம் |
| பி.ப. 4.00 | - | சுவிசேஷக்கூட்டம் (சிங்கள மொழி) |
| பி.ப. 6.00 | - | சுவிசேஷக்கூட்டம் (ஆங்கில மொழி) |

### செவ்வாய்க்கிழமை

| | | |
|---|---|---|
| பி.ப 6.30 | - | சுவிசேஷக்கூட்டம் (தமிழ் மொழி) |

### புதன் கிழமை

| | | |
|---|---|---|
| பி.ப 6.00 | - | ஜெபக்கூட்டம் |

### வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| பி.ப 6.00 | - | வேத ஆராய்ச்சி |

இக்கூட்டங்களில் பங்குபெற உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்!





# எது எளிது?

வாசிக்க வேண்டிய வேதப் பகுதி: மாற்கு 2:1-12

**'உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன் படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது? மாற்கு 2:9**

வாசித்த வேதபகுதியில் இயேசு கிறிஸ்துவானவர் கப்பர்நகூமிலுள்ள ஒரு வீட்டில் தங்கியிருக்கையில் திரளான ஜனங்கள் கூடி வந்து வாசலுக்கு முன்னும் நிற்க இடம் போதாதபடிக்கு நெருங்கி நின்று அவரது போதகத்தைக்-கேட்டுக்கொண்டிருந்தனர். அப்பொழுது திமிர்வாதமுள்ள ஒரு மனிதனை நான்கு பேர் சுமந்து வந்தனர். ஆனால் ஜனக்-கூட்டம் நெருங்கியிருந்ததால் அந்த நோயாளியை இயேசுவுக்கு அருகில் கொண்டு செல்ல முடியாமல் அவர் இருந்த வீட்டின் மேற்கூரையைப் பிரித்து திறப்பாக்கி அதின் வழியாக அந்தத் திமிர்வாதக்காரனை படுக்கையோடே கூட அவருக்கு முன்பாக இறக்கினார்-கள். இயேசுவானவர் அந்த நான்கு பேரின் விசுவாசத்தைக் கண்டு, திமிர்-வாதக்காரனை சுகமாக்கியதுமல்லாமல், அவனுக்கு பாவமன்னிப்பின் நிச்சயத்-தையும் வாக்குக்கொடுத்து அனுப்பி விடுவதைப்பற்றி வாசிக்கிறோம்.

இச்சம்பவத்திலிருந்து முக்கிய-மாக இரண்டு விடயங்களை நாம் தியானித்து புரிந்துகொள்ள வேண்டும்.

1. அந்த நான்கு மனிதர்களின் நற்செயல்
2. வியாதியஸ்தன் மேல் இயேசு-வானவரின் கரிசனை

முதலாவதாக அந்நால்வரின் நற்-செயல்களைக் குறித்து சிந்தித்தால் அவர்களுடைய பெயர் வேதத்தில் குறிப்பிடப்படவில்லை. தங்கள் பெயர் பிரஸ்தாபத்தை நாடாமல் தேவை-யுள்ள ஒரு மனிதனை கிறிஸ்துவிடம் கொண்டு வர அவர்கள் ஒன்றுபட்டு செயற்பட்ட விதம் இன்று எமக்கும் அது பெரும் அறைகூவலாகவே இருக்கிறது.

அவர்களின் பெயர்கள் அறியப்படாத பட்சத்திலும், வேத வல்லுனர்கள் அவர்களுக்கு பின்வருமாறு பெயர்களை சூட்டியிருப்பது பொருத்தமானதாகவே அமைகிறது.

- இரக்கம்
- ஒத்துழைப்பு
- விடாமுயற்சி
- நுண் அறிவு

ஆம்! இன்றைய உள்ளூர் திருச்-சபைகளில் அங்கம் வகிக்கும் விசுவாசிகளிடம் இத்தகையதான குணப்பண்புகள் நிறைந்திருக்குமானால் சரீர மற்றும் ஆவிக்குரிய தேவைகள் உள்ள அநேகரை இயேசு கிறிஸ்து-விடமாய் கூட்டி சேர்க்க இலகுவாக அமையும்.

இரக்கம் என்பது இயேசுவானவரின் மனவுருக்கத்துடன் தொடர்புடைய-தாயிருக்கிறது. அவர் தம்மைத் தேடி வருபவர்களைக் கண்டு மனதுருகினார். அவர் ஜனங்களைப் பார்த்த போது மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல தொய்ந்துபோய் இருப்பதைக் கண்டு மனதுருகினார்.

ஆம்! இன்னும் தேவனற்றவர்களாய் தேவையோடு இருப்பவர்கள் மீது எமது சிந்தையும், செயலும் அப்படியாகத்தான் இருக்க வேண்டும்

ஒத்துழைப்பானது ஒருமனப்பாட்டை பிரதிபலிக்கிறது. அந்த நாலு மனிதர்களும் திமிர்வாதமுள்ள அம்மனிதனை கிறிஸ்துவின் அருகில் சேர்க்க ஒரே சிந்தையுடையவர்களாய் செயல்பட்டனர். இன்று நாம் எந்த நற்கிரியைகளும் செய்ய ஆகாதவர்களய் இருப்பதற்கு காரணம் என்ன? நாம் ஒத்துழைப்பு வழங்குவதில்லை. ஏனெனில் எமக்குள் ஒருமனப்பாடு இல்லை.

விடாமுயற்சியானது சோர்வு அசதி இன்னும் மாமிச பெலவீனங்களை மேற்கொண்டு வெற்றி பெறும் ஒரு சிறந்த ஆயுதமாகும். இந்நான்கு மனிதர்களும் ஜனக்கூட்டம் மிகுதியாய் இருப்பதைக் கண்டு சோர்ந்து போகவில்லை. எப்படியாயினும் முயற்சித்து வெற்றி பெறுவதே அவர்களின் இலக்காயிருந்தது.

நுண் அறிவு: இதை சமயோசித புத்தி என்றும் கூறுவர். அதாவது, சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்றவண்ணமாக சிந்தித்து விவேகத்துடன் செயற்படும் தன்மையைக் குறிக்கின்றது.

ஆம்! இரக்கம், ஒத்துழைப்பு, விடாமுயற்சி, நுண் அறிவு போன்ற சிறந்த குணாதிசயங்கள் உடையவர்களாய் நாம் இருந்தால் தேவையுள்ள அநேகரை கிறிஸ்துவிடம் கூட்டிச் சேர்க்கவும், சபைக்கும், சமுதாயத்துக்கும் ஆசீர்வாதமாக நாம் பயன் கொடுக்க முடியும்.

இரண்டாவதாக வியாதியஸ்தன் மேல் இயேசுவானவரின் கரிசனையைப் பற்றிச் சிந்திப்போம்.

மாற்கு 2:5ம் வசனத்தில் "இயேசு அவர்கள் விசுவாசத்தைக் கண்டு "மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்றார். அதாவது "நீ எழுந்து நடவென்று சொல்வதற்கு முன் உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்று சொன்னார். ஏனெனில், இயேசு கிறிஸ்துவானவர் ஒருவனுடைய ஆத்தும மீட்பையே முதலாவதாக கவனத்திக் கொள்கிறார். சரீர ஆரோக்கியமானது இரண்டாவது நிலை தான். முதலாவதாக ஒருவனது நித்தியத்திற்கான தேவையையே அவர் வலியுறுத்துகிறார். இம்மைக்குரிய தேவைகள் இரண்டாம் நிலை தான்.

ஆனால், இன்று நம்மில் அநேகர் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களையே முன்நிலைப்படுத்துகிறோம். அநேக ஊழியர்கள் கூட இம்மைக்குரிய ஆசீர்வாதங்களை மட்டுமே முக்கியத்துவப்படுத்திப் போதிக்கின்றார்கள்.

இயேசுவானவர் "மகனே உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது" என்று சொன்னதைக் கேட்ட வேதபாரகர்களில் சிலர் தங்களுக்குள்ளே முறுமுறுத்து இவன் இப்படி தேவதூஷணம் சொல்லுகிறதென்ன? தேவன் ஒருவரேயன்றிப் பாவங்களை மன்னிக்கத்தக்கவர் யார்? என சிந்தித்தனர்.

அப்பொழுது தான் இயேசு கிறிஸ்து அவர்களைப் பார்த்துக் கேட்டார்: "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டதென்று சொல்வதோ, எழுந்து உன்படுக்கையை எடுத்துக்கொண்டு நடவென்று சொல்வதோ, எது எளிது?"

மேலும், "பூமியிலே பாவங்களை மன்னிக்க மனுஷகுமாரனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறியவேண்டும்" என்று சொல்லி, "திமிர்வாதக்காரனை

நோக்கி: நீ எழுந்து, உன் படுக்கையை எடுத்துக்கொண்டு, உன் வீட்டுக்குப் போ என்று உனக்குச் சொல்லுகிறேன்" என்றார். உடனே, அவன் எழுந்து, தன் படுக்கையை எடுத்துக்கொண்டு எல்லாருக்கு முன்பாகப் போனான். அப்பொழுது எல்லாரும் ஆச்சரியப்பட்டு: நாம் ஒருக்காலும் இப்படிக் கண்டதில்லையென்று சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்.

ஆம்! அவருக்கு எதுவுமே எளிதான காரியம் தான். எவனொருவன் தன் பாவங்களை மன்னிக்க இயேசுவானவர் அதிகாரமுடையவராய் இருக்கிறார் என விசுவாசிக்கிறானோ, அவனை அவனது படுக்கையிலிருந்து எழுந்து நடக்கப் பண்ணுவது ஆண்டவருக்கு எளிது. எவனொருவன் தன் சிறையிருப்பை மாற்ற அவரால் முடியும் என அவரது வார்த்தைக்குச் செவிசாய்க்கிறோனோ அப்படிப்பட்டவனுடைய பாவங்களை மன்னிப்பது அவருக்கு எளிது?

பல வருடங்களாகப் பாவத்தின் பலனான திமிர்வாதத்தினால் படுக்கையில் கிடந்தவனுடைய வாழ்க்கையிலே "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்ற ஆண்டவரின் வாக்கு அவனுக்குள் பிரவேசித்த போது அந்த வார்த்தையை அப்படியே விசுவாசித்து ஏற்றுக்கொண்ட அவன் எழுந்து நடந்தான். வியாதி நீங்கி சுகம் பெற்றான். ஆம்! சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள். யோவான் 08: 32, 36

சிந்திப்போம்! செயலாற்றுவோம்!

- Bro. M. Gnanendran -

## கிருபையின் சுவிசேஷம்

1. பவுலின் சுவிசேஷம்
2 தீமோத்தேயு 2:8

2. தேவனின் சுவிசேஷம்
ரோமர் 1:1

3. கிறிஸ்துவின் சுவிசேஷம்
2 கொரிந்தியர் 10:14

4. மகிமையான சுவிசேஷம்
2 கொரிந்தியர் 4:4

5. இரட்சிப்பின் சுவிசேஷம்
எபேசியர் 1:13

6. வல்லமையான சுவிசேஷம்
ரோமர் 1:16

7. சமாதானத்தின் சுவிசேஷம்
எபேசியர் 6:15

**"அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்து~கிறேன். நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு, அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான் உங்களுக்குப் பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால், அதினாலே இரட்சிக்கப்படுவீர்கள் மற்றப்படி உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்குமே. நான் அடைந்ததும் உங்களுக்குப் பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால், கிறிஸ்துவானவர் வேத வாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாளில் உயிர்த்தெழுந்து....."**
**1 கொரிந்தியர் 15:1~5**

# யாது உம் வயது?

- S. வரபிரசாத் -

ஒவ்வொரு வருடம் முடியும் போதும் வரப்போகும் புது வருடத்தை எண்ணி மகிழ்வாரும் உண்டு, தன் வயது ஏறிக்கொண்டே போகின்றதே என கவலை உறுவாரும் உண்டு.

நாம் வாழும் நாட்டில் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வயது உள்ளது. 3 வயதில் அறநெறி, 14 வயதுவரை கட்டாயக்கல்வி, 18ல் வாகன சாரதிப்பத்திரம், 60ல் ஓய்வு என வயதெல்லைகள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

இஸ்ரவேலர் மத்தியிலும் இப்படியாக வயதெல்லைகள் இருந்தன. கர்த்தர் இஸ்ரவேலரை எண்ணும்படி மோசேக்கு சொல்லிய எண்ணாகமம் புத்தகத்தில் இவ்வயதெல்லைகள் எழுதப்பட்டுள்ளன.

### இருபதில் யுத்தம்

யுத்தத்திற்கு போகத்தக்கவர்களை எண்ணும் போது தேவன் கொடுத்த ஆரம்ப வயதெல்லை இருபது ஆகும் (எண்ணாகமம் 1:3). இது குறிப்பிடுவது என்ன? ஒருவன் இருபது வயதடையும் போது யுத்தம் செய்ய தகுதியாகிறான். யுத்தம் செய்வதற்கு உடல் பலம் மற்றும் மனபலம் இவை இரண்டும் செம்மையாய் இருக்க வேண்டும். எனவே, தேவனின் நியமத்தின் படி 20 வயது பூர்த்தியான ஒருவன் யுத்தம் செய்வதற்கு உகந்த மனபலமும் உடல்பலமும் கொண்டவனாய் இருக்கிறான்.

எனவே, உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைப்பண்ண இடங்கொடாமல், கிறிஸ்துவுக்கான உன் வாழ்வில் ஆவிக்குரிய யுத்தஞ்செய்ய வாலிபனே நீ ஆயத்தப்படு!

வேசித்தனம் செய்யாமல் பாவத்துடனான யுத்தத்தை யோசேப்பு வென்றதும், கோலியாத்தைக் கொன்று கர்த்தரின் நாமத்தை உயர்த்தும்படி பயத்துடனான யுத்தத்தை தாவீது வென்றதும் வாலிப வயதில் அல்லவோ?

வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன் என அப்போஸ்தலன் யோவான் சொன்னது உன்னைப் பார்த்து அல்லவா?

### இருபத்தைந்தில் ஊழியம்

எண்ணாகமம் 8:24ல் உள்ள கட்டளை என்னவெனில், இருபத்தைந்து வயது முதல் அதற்கு மேற்பட்ட வயதுள்ள யாவரும் ஆசரிப்புக்கூடாரத்தின் பணிவிடை செய்யும் சேனையிலே சேவிக்க வர வேண்டும் என்பதாகும். எண்ணாகமம் 4ம் அதிகாரத்தில் முப்பது வயது முதல் ஐம்பது வயது வரையிலானவர்கள் ஆசரிப்புக் கூடாரத்திலே வேலைசெய்யும் சேனைக்கு உட்படத்தக்கவர்கள் எனக் கூறப்பட்டுள்ளது.

ஒரு குடும்பத்தைப் பொறுப்பேற்று நடத்த ஒருவன் சரியாக உணர்ந்து கொள்ளும் வயதிலே, தொழில் செய்து சம்பாதிக்கும் வயதிலே, அப்படிப்பட்டவர்கள் ஆசரிப்புக்கூடார பணிவிடை செய்ய வேண்டும் என தேவன் எதிர்பார்க்கின்றார்.

இன்று, இதில் நம்மில் எத்தனைப்பேர் தோற்றுப்போய் விடுகிறோம். சபைக்கூட்டங்களுக்கு வராமல் இருப்பதற்கு நம்மில் அநேகர் சொல்லும் காரணம் குடும்பமும் தொழிலும் அல்லவா!

“யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாய் இருக்கமாட்டான்.” என லூக்கா 14:26லும் “தகப்பனையாவது தாயையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப்பாத்திரன் அல்ல, மகனையாவது மகளையாவது என்னிலும் அதிகமாய் நேசிக்கிறவன் எனக்குப் பாத்திரன் அல்ல.” என மத்தேயு 10:37லும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து சொன்னார்

யோசுவா எனும் ஓர் வாலிபனைப்பற்றி என்ன அருமையாக யாத்திராகமம்33:11ல் எழுதப்பட்டுள்ளது எனப்பாருங்கள்!

**ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல, கர்த்தர் மோசே~ யோடே முகமுகமாய்ப் பேசினார். பின்பு, அவன் பாளயத்துக்குத் திரும்பினான். நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக்கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்.**

பாருங்கள்! தேவனோடு முகமுகமாய்ப் பேசிய மோசே போன பின்பும் கூட யோசுவா எனும் வாலிபன் ஆசரிப்புக்கூடாரத்தை விட்டுப்பிரியாதிருந்தான். இன்று எத்தனை வாலிபரைப்பற்றி நம்மால் இப்படிக்கூற முடியும்?

ஆகாமியக் கூடாரங்களில் வாசமாய் இருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துகொள்ளுவேன் என தாவீது சங்கீதம் 84:10ல் கூறியது போல் நம்மில் எத்தனைபேருக்கு கூற முடியும?

**கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன். (சங்கீதம் 27:4)**

## ஐம்பதில் ஓய்வு

ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் வேலைசெய்யாமல் திருப்பணி சேனையை விட்டு, ஆசரிப்புக்கூடாரத்தின் காவலைக்காக்கிறதற்குத் தங்கள் சகோதரரோடே கூட ஊழியஞ்செய்வதேயன்றி, வேறொரு சேவகமும் செய்யவேண்டியதில்லை என எண்ணாகமம் 8:25,26ம் வசனங்களில் தேவன் கூறுகிறார்.

முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதை உள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், விசுவாசத்திலும் அன்பிலும் பொறுமையிலும் ஆரோக்கியமுள்ளவர்களுமாய் இருக்க வேண்டும் என தீத்து 2:2லே கூறப்பட்டுள்ள தகுதிகள், காவலனுக்கு இருக்க வேண்டிய தகைமைகளுடன் ஒத்துப்போகிறதல்லவா?

முதிர்வயதுள்ளவர்கள் தகப்பனுடைய ஸ்தானத்திலல்லவா 1 தீமோத்தேயு 5:1ல் கருதப்படுகிறார்கள்?

ஆகவே வயதில் முதிர்ந்த நாம், இளையவர்களை பயிற்றுவிப்பதிலும் அவர்கள் நல்வழி நடக்கிறார்களா என கண்காணிப்பதிலும் புத்திசொல்வதிலும் ஈடுபட்டு கர்த்தருக்குள்ளே அவர்களைக் காத்துக்கொள்ள வேண்டியவர்கள் அல்லவா?

இப்படியாக, நமது வயது எதுவாயிருப்பினும், நாம் எதற்காக அழைக்கப்பட்டிருக்கிறோமோ, தேவன் நம்மிடம் எதை எதிரப்பார்க்கிறாரோ அதைச் செய்வதற்கு வருகிற புதுவருடத்திலே நாம் தீரமானிப்போமா?

**அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்ளுங்கள் (எபேசியர் 4:1).**




# பூரணர் யார்?

- Bro. Chamara -

பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டில் நாம் காணும் இஸ்ரவேல் ஜாதியிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக் கூடிய ஒரு பாடம் தான் தேவனுடைய ஜனமாகிய இஸ்ரவேலர் தங்களுடைய சரித்திரத்தில் ஒருபோதும் பரிபூரணத்தை எட்டவில்லை என்பதாகும். இஸ்ரவேலர் தேவனுக்கு முன்பதாக பரிபூரணராய் இருக்கவில்லை என்பதற்கு அநேக உதாரணங்களை நாம் வேதத்தில் காணலாம். அவர்களின் வனாந்தர பயணக்காலத்தில் நாம் இதை நன்கு காணலாம். அவர்கள், அந்த வனாந்தர பயணத்தில் தேவனைத்துக்கப்படுத்தியதோடு அவர்களின் முறுமுறுப்புக்கோ குறையிருக்கவில்லை. அவர்களின் வாழ்க்கை ஒருபோதும் திருப்தியுள்ளதாயோ நிறைவானதாயோ இருக்கவில்லை. (உதாரணம்: யாத்திராகமம் 15:24, 16:2, 16:8, 17:3, எண்ணாகமம் 14:9-27)

இன்று நமது வாழ்க்கையும் இவ்வண்ணமாயிருக்கலாம் நாமும் திருப்தியில்லாத நிறைவு இல்லாத வாழ்க்கை வாழ்கிறவர்களாக காணப்படலாம். நம் வாழ்க்கையில் பல குறைவுகள், பல முறுமுறுப்புகள், பல பின்வாங்குதல்கள் இருக்கலாம். தேவனை உண்மையாய் அறிந்து கொண்ட பின்பும் அந்நிலையிலேயே நாம் இருக்கலாம். இது பரிதாபமான, கவலைக்கிடமான நிலைமையாகும். அதுமட்டுமல்லாது, நாம் அதிலிருந்து விடுபட முயலுவதும் இல்லை. இது பரிதாபம். எனினும், நம் வாழ்க்கை பரிபூரணமற்றதாய் இருக்கும் போதே நாம் மற்றவர்களின் வாழ்விலிருக்கும் குறைகளைத் தேடிவருகிறோம்.

ஆனாலும் ஆண்டவர் இயேசு இப்படிச்சொன்னார்: “நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத்தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள் நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின் படியே உங்களுக்கும் அளக்கப்படும். நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன் சகோதரன் கண்ணில் இருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? இதோ, உன் கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி? மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்”. இவ்வார்த்தைகள் மூலமாக ஆண்டவர் நமக்கு கற்பிப்பது என்னவென்றால், மற்றவர்களின் வாழ்க்கையிலுள்ள குறைகளைப் பார்க்கும்முன்னர் நம் வாழ்க்கையிலுள்ள குறைகளைப் பார்த்துத்திருத்திக்கொள்வது முக்கியமாகும் என்பதே. தேவன் தனிப்பட்ட முறையிலே

உங்கள் வாழ்க்கையைப் பார்க்கிறார். தேவனுக்கு தேவையானதெல்லாம் அவருக்கு முன்பாக உங்கள் வாழ்க்கை பூரணமானதாய் இருப்பதேயாகும்.

ஆனால், மற்றவர்களின் வாழ்க்கையும் வேதத்திலுள்ள இஸ்ரவேலரின் வாழ்க்கையும் பூரணமற்றதாயிருப்பது நமக்கு ஒரு சாக்குபோக்கு அல்ல. அதை நாம் நமக்கான உதாரணமாய் எடுப்பது பயனற்றதாகும். ஏனென்றால், நமக்கான உதாரணமாய் நம் ஆண்டவர் இயேசுவே இருக்கின்றார். சுவிசேஷ புத்தகங்களை வாசிக்கும் போது அவருடைய வாழ்க்கை எவ்வளவு பரிபூரணமானதாயிருந்தது என நாம் கண்டுகொள்ளலாம்.

அவர் ஒருபோதும் முறுமுறுக்கவோ தேவனைத் துக்கப்படுத்தவோ இல்லை. அவர் ஓர் பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார். இது, மிகத்தெளிவாக எபிரேயர் 12:1-3 எனும் பகுதியில் காணலாம். “ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம். அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாத படிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்”.

மற்றவர்களின் வாழ்க்கையை நாம் முன்மாதிரியாகக் கொள்வதற்கு மாறாக, ஆண்டவராகிய இயேசுவின் வாழ்க்கையை மாதிரியாகக்கொள்வதன் மூலம் நம் வாழ்க்கையை பூரணமடையச்செய்யலாம்.

அவர் எல்லாவற்றிலும் பூரணராய் இருக்கும் அதேவேளை, நம் வாழ்வையும் தேவனுடைய அளவுமட்டத்துக்கு உகந்த வகையிலே தேவனுக்குள் பூரணப்படுத்துகிறவராயும் இருக்கிறார். எபிரேயர் 12:1ன் படி, நம் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிற இயேசுவை நாம் நமக்கு முன்மாதிரியாகக் கொள்வதோடு அவரைப் பின்பற்றவும் வேண்டும். அது நம் வாழ்க்கையைப் பூரணமானதாக்குவதற்கு சிறந்த வழியாகும்.

இன்று நாம், இஸ்ரவேலரைப் போன்ற வாழ்க்கை வாழாதிருப்போம். ஆண்டவர் இயேசு வாழ்ந்தது போல் நாம் வாழ்வோம். இதுவே நம் நோக்கமும், மனப்பான்மையும், தீர்மானமுமாயிருக்க வேண்டும். அதாவது, ஆண்டவர் இயேசு வாழ்ந்தது போலவே ஆவி நிறைந்த வாழ்க்கை வாழ்தல் ஆகும்.

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுவதனால் நம் வாழ்க்கையை நாம் பூரணமானதாக்கிக்கொள்வோம். அதாவது, நம் ஆவிக்குரிய வாழ்க்கையையும் அன்றாட வாழ்க்கையையும் அவரைப்பார்த்து பூரணப்படுத்திக்கொள்வோம்.

# தேவன் நம்மை பராமரிக்கும் விதம்

1. ஒரு தாய் தன் பிள்ளையை தேற்றுவது போல்
   ஏசாயா 66:13
2. ஒரு தகப்பன் தன் பிள்ளைக்கு இரங்குவது போல்
   சங்கீதம் 103:13
3. ஒரு பால் கொடுக்கும் தாய் தன் பிள்ளையை போஷிப்பது போல்
   தெசலோனிக்கேயர் 2:7
4. ஒரு மேய்ப்பன் சிதறிப்போன ஆடுகளை கூட்டிச் சேர்ப்பது போல்
   எசேக்கியேல் 34:12
5. கோழி தன் குஞ்சுகளை பாதுகாப்பது போல்
   மத்தேயு :23:37
6. கழுகு தன் குஞ்சுகளை தன் செட்டைகளின் மேல் சுமந்து கொண்டு போகிறது போல்
   உபாகமம் 32:11
7. மணவாளன் தன் மணவாட்டியின் மேல் மனமகிழ்ச்சியாய் இருப்பது போல்
   ஏசாயா 62:5

# கிறிஸ்தவ அந்நியோன்ய உறவுகள்

1. ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல்
   ரோமர் 15:7
2. ஒருவரையொருவர் மேன்மையுள்ளவராக எண்ணுதல்
   பிலிப்பியர் 2:3
3. ஒருவரையொருவர் கவனித்தல்
   எபிரேயர் 10:24
4. ஒருவரையொருவர் வளர்ச்சிடைய செய்தல்
   ரோமர் 14:19
5. ஒருவருக்கொருவர் ஆலோசனை வழங்குதல்
   எபிரேயர் 3:13
6. ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுதல்
   ரோமர் 15:14
7. ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருத்தல்
   எபேசியர் 5:21

- Bro. S. Xavier -

# ஜெபம் கேட்கப்படாததன் காரணம்

நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாத-விதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியி-னால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்-கள். யாக்கோபு 4:3

ஒரு மனிதன் ஒரு உதவியை எதிர்பார்த்து தன் நண்பனுக்கு போன (phone) செய்கிறான். அந்த நண்பர் உயர்ந்த இடத்தில் வேலை செய்கிறார். அந்த மனிதன் நண்பனுக்கு போனை எடுக்கின்றான், நண்பர் இன்னும் போனை எடுக்கவில்லை. நீண்ட நேரம் முயற்சி-க்கிறான், பிறகு நண்பன் போனை எடு-த்ததும் தன் உதவியைச்சொன்னான். நண்பன் போனை வைத்துவிட்டான். பிறகு, அந்த மனிதன், "ஐயோ, நான் அவரிடம் கேட்டேனே அவர் எனக்கு ஒன்றும் செய்யவில்லையே" என்று புலம்பிக்கொண்டிருந்தான்.

நாம் தேவனிடம் ஜெபிக்கவில்லை. நம்மிடமே ஜெபித்துக்கொள்கிறோம். "நான் ஜெபித்துவிட்டேன், தேவன் எனக்கு பதில் கொடுப்பார்" என காத்திருக்கிறோம். ஆனால், நாம் செய்யும் ஜெபங்களை கேட்க கூடா-தபடி சில தடைகள் நம் வாழ்வில் காணப்படுமேயானால், அதை திருத்தி-க்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

லூக்கா 18:9-14 வரையுள்ள இயேசு கிறிஸ்து கூறியுள்ள உவமையிலே பரிசேயன் தன்னிடத்தில் தானே ஜெபி-த்தான். இதைக்குறித்து வேதாகமத்தில் மிகத்தெளிவாக எழுதப்பட்டிருக்கிறது, "தனக்குள்ளே ஜெபம் பண்ணினான்" என்று. உங்களுக்கு நீங்களே பேசிக்-கொள்வதைப்போல இன்னும் அநேகர் தேவனை நோக்கி ஜெபிக்கிறேன் என எண்ணுகிறார்கள். ஆனால், தேவன் அந்த ஜெபத்தைக் கேட்கவில்லை. காரணம் அவர்களின் மனச்சாட்சி தூய்மையாக இல்லை.

பரிசேயனைப் போல மற்றவர்களை காட்டிலும் நான் நல்லவன் என எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். இந்த பூமியில் நாம் அற்பமாக எண்ணும் ஒரு மனிதன் இருந்தால் கூட தேவன் மறுமுனையில் போனை எடுக்க மா-ட்டார். பிறரை அற்பமாக எண்ணுகிற நம் ஜெபத்திற்கு தேவன் செவி கொ-டார். நம் சபையிலுள்ள ஒரு நபரைப்-பார்த்து "ஆண்டவரே, உமக்கு நன்றி. நான் இந்த மனிதனை போல இல்லை." என்போமானால், தேவன் நம் ஜெப-த்தை கேட்க மாட்டார்.

ஆனால் ஆயக்காரன், "தேவனே. பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான். அந்த ஒரே வார்த்தையினாலே அவன் தேவனுக்கு முன்பதாக பரிசுத்த-மாக்கப்பட்டவனாய் வீட்டிற்கு சென்றான். ஏன்? அவன் எல்லாரைக்காட்டிலும் நான் தான் மோசமானவன் (பாவி) என்று உணர்ந்தான். வேறு ஒருவரோடும் தன்னை ஒப்பிட்டுப்பார்க்க முடியாத ஒரு பாவி என்று தன்னைத் தாழ்த்தினான். சில சமயங்களில் நாம் மற்றவர்களை அற்பமானவன் என்று காயப்படுத்தும் வார்த்தைகளால் பேசாமல் இருக்-கலாம். ஆனால், நம்முடைய நட-த்தையால், மனப்பான்மையினால் அவர்களை சிறியவன் என உணர செய்வோமானால் நம் ஜெபம் கேட்கப்-படாது. அது நம் ஜெபத்தை தேவன் ஏற்றுக்கொள்ளாதபடி தடை செய்து விடும்.

அந்த பரிசேயன் ஆயக்காரனை அற்பமாக எண்ணினான். அதுவே தேவன் அவனை ஏற்றுக்கொள்ளாதபடி செய்து விட்டது. அது போல தான் நாமும் நம்முடைய எண்ணத்திலே தான் நினைக்கிறோம். அதுவே நம்முடைய ஜெபத்தையும் தேவன் கேளாதபடி தடை செய்து விடுமோ?

விசுவாசிகளாகிய நாம் சிந்தித்து செயற்படுவோம்.

- Bro. Sanjeevan -




## ஜீவ ஒளி

**ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்தும் நான் பெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.**

**பெயர்:** ..........................................................................................

**முகவரி:** ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**ஒப்பம்:** ..........................................................................................

# ஜீவ ஒளி

கிறிஸ்தவ ஐக்கிய ஸ்தாபனத்தினால் இலவசமாக வெளியிடப்படும் ஜீவ ஒளி சஞ்சிகையை தொடர்ந்து நீங்கள் பெற்றுக்கொள்ள விரும்பினால் உள்ளே இருக்கும் கூப்பனில் உங்கள் பெயரையும் முகவரியையும் நிரப்பி அனுப்பிவையுங்கள்.

மேலதிக விபரங்களுக்கு:

Jeeva Oli
Christian Fellowship Centre
7, Vivekananda Road, Wellawatte,
Colombo 6.
Tel: 2581901
www.christianfellowshipcentre.com